கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வள்ளியூர்

முன்னிலை: திரு ஜெ.ஆன்ஸ் ராஜா பி.ஏ, பி.எல்.,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வள்ளியூர்

திருவள்ளுவர் ஆண்டு 2054 சுபகிருது வருடம் தை மாதம் 17–ம் நாள் செவ்வாய்கிழமை

2023 ஆம் வருடம் ஜனவரி மாதம் 31–ஆம் நாள், செவ்வாய்கிழமை

அசல் வழக்கு எண். 133 of 2019

(CNR No.TNTL-08-000197-2019)

செல்வகுமார் ... வாதி

/எதிர்/

சரோஜா ... பிரதிவாதி

இவ்வழக்கு 19.01.2023 தேதி அன்று என் முன்னால் இறுதியாக விசாரணைக்கு வந்தபோது வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு எஸ். காந்திமதி நாதன் பி.ஏ., பி.எல்., அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. எஸ். சாமி பி.எஸ்.சி., எம்.எல்., அவர்கள் எதிர்வழக்குரை தாக்கல் செய்து விசாரணைக்கு ஆஜராகததால் ஒருதலைபட்சமாக்கப்பட்டுள்ளார், வாதி தரப்பில் எடுத்துரைத்த வாத உரையை கேட்டும் சாட்சி மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

J ANNS RAJA Digitally signed by J ANNS RAJA Date: 2023.01.31 15:45:48 +0530

**<u>தீர்ப்புரை</u>**

தபசில் சொத்துக்களில் வாதி குத்தகைகாரர் என்ற முறையில் அனுபவம் செய்வதை தடுக்கும் முகமாக பிரதிவாதி தபசில் சொத்திற்குள் அத்துமீறி நுழையவோ, பயிர்களை அழிக்கவோ அல்லது வேறு எவ்விதத்திலும் எந்த இடைஞ்சலும் செய்யக்கூடாதென நிரந்தர நிலையுறுத்து கட்டளை பரிகாரம் வழங்கக் கோரி வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1. **<u>வழக்குரையின் சுருக்கம்:</u>**

தபசிலில் கூறப்பட்டுள்ள சொத்தானது திருவாடுதுறை ஆதினம் என்ற சைவ சமய மடத்திற்கு பாத்தியப்பட்டதாகும். பிராது தபசில் சொத்தானது நஞ்சை நிலமாகும். வாதி கடந்த 22.02.2018-ம் தேதி நஞ்சை குத்தகை பத்திரம் மூலம் குத்தகைக்கு பெற்று அனுபவம் செய்து வருகிறார். குத்தகை காலமானது 22.02.2018-ல் துவங்கி 30.06.2020 வரை அளிக்கப்பட்டுள்ளது. திருவாடுதுறை ஆதீனமானது Madras Public Trust (Regulation of Administration of Agricultural land) Act 1961 as Amended Tamil Nadu Act 17/70-ன் படி இந்த நஞ்சை குத்தகை பத்திரத்தை பிறப்பிக்க திருவாடுதுறை ஆதீன கர்த்தர் அவர்களுக்கு உரிமையுள்ளது.

மேற்படி நஞ்சை குத்தகை பத்திரமானது ஆதீன கர்த்தர் அம்பலவாண சுவாமி சன்னதி அவர்களால் சாட்சிகள் முன்னிலையில் இயற்றப்பட்டதாகும். வாதி தபசில்

J ANNS RAJA
Digitally signed by J ANNS RAJA
Date: 2023.01.31 15:46:00 +0530

சொத்தினை குத்தகைக்கு எடுத்து அதில் குத்தகைதாரர் என்ற முறையில் குத்தகை ஆவணத்தில் கூறப்பட்ட நிபந்தனைகளையும், விதிமுறைகளையும் பின்பற்றி தபசில் சொத்தினை அனுபவித்து வருகிறார். அதில் நெல் உள்ளிட்ட பயிர்களை சாகுபடி செய்து விளைச்சலில் நெல்லுக்கு ஈடாக ரொக்கப் பணத்தை ஆதீனத்திற்கு முறைப்படி வாதி சமர்ப்பித்து அதற்கு ரசீது பெற்றுள்ளார்.

மேற்படி தபசில் சொத்தின் அனுபவமானது திருவாவடுதுறை ஆதீனத்திற்கும், வாதிக்கும் மட்டுமே உள்ளது. வேறு யாருக்கும் கிடையாது. இந்நிலையில் தபசில் சொத்தினை சட்ட விரோதமாக அபகரிக்க வேண்டும் என்ற கெட்ட நோக்கில் பிரதிவாதி செயல்பட்டு வருகிறார். அவருக்கு பிராது தபசில் சொத்தில் எவ்வித உரிமையும், அனுபவமும், பின் தொடர்ச்சியும் கிடையாது. பிரதிவாதி பிராது தபசில் சொத்தில் வாதி ஏற்படுத்தியிருக்கும் பயிர்களை அழித்து அதன் மூலம் வாதிக்கு தபசில் சொத்தின் மீதுள்ள குத்தகை அனுபவத்தை இடையூறு செய்யும் முகமாக கடந்த 14.06.2019 அன்று பிராது தபசில் சொத்தில் அத்துமீறி நுழைந்தார். அதனால் வாதி கூடங்குளம் காவல் நிலையத்தில் பிரதிவாதி மீது புகார் அளித்துள்ளார். கூடங்குளம் காவல் நிலையம் புகாரை ஏற்றுக்கொண்டு சமூக பணி பதிவேட்டின் ரசீது கொடுத்துள்ளார்கள்.

இந்நிலையில் 2 மாதம் கழித்து மறுபடியும் பிரதிவாதி கடந்த 17.08.2019 அன்று தபசில் சொத்தில் அத்துமீறி நுழைந்து அங்கு பயிரிட்டிருக்கும் பயிர்களை

J ANNS RAJA
Digitally signed by J ANNS RAJA
Date: 2023.01.31 15:46:13 +0530

சேதப்படுத்த முயன்றார். வாதி மிகுந்த பிரயத்தனம் செய்து அதனை தடுத்து நிறுத்தினார். எனினும் இந்த அபாயம் தொடர வாய்ப்புள்ளது. கூடங்குளம் காவல் நிலையத்தில் மறுபடியும் வாதி புகார் அளிக்க சென்ற சமயத்தில் உரிய சிவில் நீதிமன்றம் மூலம் பரிகாரம் தேடிக்கொள்ளுமாறு வாதியை அறிவுறுத்தினர். பிரதிவாதி பிராது தபசில் சொத்தில் வாதி பயிரிட்டுள்ள பயிர்களை அழிப்பதன் மூலம் வாதியின் குத்தகை அனுபவத்தை மீண்டும் இடையூறு செய்யப்போவதாக பிரஸ்தாபம் செய்துள்ளார். மேற்படி பிரதிவாதி சட்டதிட்டத்தை மதியாதவர். அவர் பணபலம் மற்றும் ஆள்பலம் மிக்கவர். அவர் கூறியது போல் செய்து விட்டால் வாதிக்கு அளவிட முடியாத கஷ்ட நஷ்டம் ஏற்படும். எனவே, வாதி இன்ஜங்ஷன் பரிகாரம் கோரி இவ்வழக்கு தாக்கல் செய்கிறார்.

2. **<u>பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரையின் சுருக்கம்:</u>**

பிராது பத்தி 3ல் வாதி கூறியுள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மையல்ல. பிராது தபசில் சொத்து திருவாவடுதுறை ஆதீனம் என்ற சைவ சமய மடத்திற்குப் பாத்தியப்பட்டது என்பது உண்மை. ஏனைய சங்கதிகள் அனைத்தும் பொய்யென இந்த பிரதிவாதி மறுக்கிறார். பிராது தபசில் சொத்தானது நஞ்சைநிலம் என்பது உண்மை. ஆனால் வாதி கடந்த 22.02.2018ம் தேதி நஞ்சை குத்தகை பத்திரம் மூலம் குத்தகைக்கு பெற்று அனுபவம் செய்து வருகிறார் என்பதும், இந்த குத்தகை

J ANNS RAJA Digitally signed by J ANNS RAJA Date: 2023.01.31 15:46:23 +0530

காலமானது 22.02.2018 ல் துவங்கி 30.06.2020 வரை அளிக்கப்பட்டுள்ளது என்பது அப்பட்டமான பொய்யாகும். அதனை வாதி தக்க ஆவணம் வழி நிரூபிக்கக் கடமைப்பட்டுள்ளார்.

உண்மையில் தபசில் சொத்தை இந்த வாதியின் தந்தை திரவியம் திருவாவடுதுறை ஆதீனத்திடமிருந்த குத்தகைக்கு பெற்று விவசாயம் செய்து அனுபவித்து வந்துள்ளார். மேற்படி திரவியம் நாடார் உயிரோடிருக்கும் போதே தனது வாரிசுகளுக்குள் சொத்து சம்பந்தமாக ஏதேனும் பிரச்சனை வந்துவிடக் கூடாது என்ற எண்ணத்தில் தான் குடியிருந்து அனுபவித்து வந்த பட்டா ஏற்பட்ட வீட்டுமனையையும், அதிலுள்ள வீட்டையும் தனது இளைய மகனான இந்த வாதிக்கும், வழக்கு பட்டிகைச் சொத்தை அவரது மூத்தமகனான தங்கத்துரை என்பவருக்கும் பஞ்சாயத்தார் மத்தியில் பேசி ஒதுக்கி கொடுத்துவிட்டபடியால் வழக்கு பட்டிகை சொத்தை வாதியின் இன்னொரு சகோதரரான மேற்படி தங்கத்துரை என்பவரே, தனது தகப்பனார் திரவிய நாடார் மறைவிற்குப் பிறகு ஆண்டனுபவம் செய்து வந்துள்ளார். எனவே, மேற்படி தங்கத்துரை என்பவரே வழக்கிற்கு அவசிய தரப்பாகும், மேலும், திருவாவடுதுறை ஆதீனம் வழக்கிற்கு அவசிய தரப்பு ஆகும். ஆகவே, அவசிய தரப்பினரை வழக்கில் கட்சி சேர்க்காத தோஷத்திற்குள்ளாகி வழக்குத் தள்ளுபடி செய்ய வேண்டியதாக இருக்கிறது.

J ANNS RAJA Digitally signed by J ANNS RAJA Date: 2023.01.31 15:46:33 +0530

வாதியின் சகோதரர் தங்கத்துரை என்பவர் தற்போது தொழில் நிமித்தம் மும்பை சென்றுவிட்ட காரணத்தால் வழக்குச் சொத்தை, இந்த பிரதிவாதியை விவசாயம் செய்து அதில் வரும் வருமானத்தின் பகுதியை தனக்குத் தந்துவிடும் படியும், அதனை பராமரித்து பாதுகாத்துக்கொள்ளபடியும் கொடுத்துள்ளார். எனவே, வாதியின் சகோதரரும் மேற்படி திரவியம் என்பவரின் மகனுமான தங்கத்துரை அவர்களுக்காகத்தான் இந்த பிரதிவாதி தபசில் சொத்தில் பயிரிடும் சம்சாரி ஸ்தானத்தில் பயிர்செய்து, அதன் வருமானத்தில் பங்கினை தங்கத்துரை என்பவருக்கும் கொடுத்து அனுபவித்து வருகிறார். வாதி இந்த உண்மை சங்கதிகளை மறைத்து பொய்யான கதைகளைக் கொண்டு தாக்கல் செய்த வழக்கு நிலைக்கத்த தக்கதல்ல.

பிராது பத்தில் 5 ல் கூறியுள்ள சங்கதிகள் அனைத்தும் தவறு. அவைகளை இந்த பிரதிவாதி வரிவரியாக மறுக்கிறார். மேற்படி பத்தியில் தபசில் சொத்தினை சட்ட விரோதமாக அபகரிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் பிரதிவாதி செயல்படுகிறார் என்பதும், பிரதிவாதி பிராது தபசில் சொத்தில் வாதி ஏற்படுத்தியிருக்கும் பயிர்களை அழித்து அதன் மூலம் வாதிக்கு தபசில் சொத்தின் மீதுள்ள குத்தகை அனுபவத்தை இடையூறு செய்யும் முகமாக கடந்த 14.06.2019 அன்று பிராது தபசில் சொத்தில் அத்துமீறி நுழைந்தார் என்பதும், பின்னர் வாதி கூடங்குளம் காவல் நிலையத்தில் பிரதிவாதி மீது புகார் அளித்தார் என்பது

J ANNS RAJA
Digitally signed by J ANNS RAJA
Date: 2023.01.31 15:46:44 +0530

உண்மையல்ல. மேலும், 17.08.2019 அன்று தபசில் சொத்தில் அத்துமீறி நுழைத்து அங்கு பயிரிட்டிருக்கும் பயிர்களை சேதப்படுத்த முயன்றார் என்பதும், பிரதிவாதி பிராது தபசில் சொத்தில் வாதி பயிரிட்டுள்ள பயிர்களை அழிப்பதன் மூலம் வாதியின் குத்தகை அனுபவத்தை மீண்டும் இடையூறு செய்யப்போவதாக பிரஸ்தாபம் செய்துள்ளார் என்பதும், பிரதிவாதி சட்டத்தை மதிக்காதவர் என்பதும், பணபலம், ஆள்பலம் மிக்கவர் என்பதும் பொய்யான சங்கதிகளாகும். இந்த வழக்கிற்கு வழக்கு மூலம் உருவாக்க வேண்டியே பொய்யான கதைகளைக் கூறி வாதி இந்த வழக்கைத் தாக்கல் செய்துள்ளார். ஆகவே வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டியதாக இருக்றிது.

3. வாதியின் வழக்குரை மற்றும் பிரதிவாதியின் எதிர்வழக்குரை ஆகியவற்றின் அடிப்படையில் இவ்வழக்கில் கீழ்க்கண்ட எழுவினாக்கள் வனையப்பட்டுள்ளது.

1. வாதியானவர் சட்டப்படியாக தாவா சொத்தில் சுவாதீனத்தில் இருந்து வருகிறாரா?
2. வாதிக் கோரியபடி நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் பெற தகுதியுடையவரா?
3. செலவுத் தொகை மற்றும் இதர பரிகாரங்கள் என்ன?

வாதி தரப்பில் வா.சா.1 மற்றும் வா.சா.2 ஆகியோர்கள் விசாரிக்கப்பட்டு, வா.சா.ஆ.01 முதல் வா.சா.ஆ.07 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

J ANNS RAJA Digitally signed by J ANNS RAJA Date: 2023.01.31 15:46:53 +0530

**<u>எழுவினாக்கள் 1 மற்றும் 2:</u>**

4. வாதியானவர் இவ்வழக்கை நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளார். வழக்கு நிலுவையில் இருக்கும் போது வாதியானவர் வழக்கை நடத்த வா.சா.1 க்கு சிறப்பு அதிகார பத்திரம் அளித்துள்ளார். மேற்படி அதிகார ஆவணமானது வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. வா.சா. 1 தன்னுடைய சாட்சியத்தில் தாவா சொத்தானது திருவாவடுதுறை ஆதினம் என்ற சைவ சமய மடத்திற்கு பாத்தியப்பட்டது என்று கூறுகிறார். தாவா சொத்தானது நஞ்சை நிலமாகும். தாவா சொத்தை வாதியானவர் கடந்த 22.02.2018 ம் தேதியில் குத்தகைக்கு எடுத்துள்ளார். அதற்கு சான்றாக வா.சா.ஆ.2 ஆன குத்தகை பத்திரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வா.சா.ஆ.2 குத்தகைப் பத்திரத்தின் படி குத்தகைக் காலம் 22.02.2018 ஆம் தேதி துவங்கி 30.06.2020 தேதி அன்று முடிவடைகிறது. வா.சா.ஆ.2 குத்தகை பத்திரத்தில் ஆதின கர்த்தர் அம்பலவாண சுவாமி சன்னதி அவர்களால் சாட்சிகள் முன்னிலையில் இயற்றப்பட்டு உள்ளது. வாதி தாவா சொத்தை குத்தகைக்கு எடுத்து குத்தகைதாரர் என்ற முறையில் வா.சா.ஆ.2 ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளையும், விதிமுறைகளையும் பின்பற்றி தாவா சொத்தை அனுபவித்து வருகிறார். அதில் நெல் உள்ளிட்ட பயிர்களை சாகுபடி செய்து விளைச்சலில் நெல்லுக்கு ஈடாக ரொக்க பணத்தை ஆதினத்திற்கு

J ANNS RAJA
Digitally signed by J ANNS RAJA
Date: 2023.01.31 15:47:03 +0530

முறைப்படி வாதியானவர் சமர்ப்பித்து வருகிறார். அதற்கு சான்றாக வா.சா.ஆ.3 ரொக்க வரவு ரசீது தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வாதியானவர் வா.சா.ஆ.2 ன் படி தாவா சொத்தை முழுவதுமாக அனுபவத்தி வருகிறார். இந்நிலையில் பிரதிவாதியானவர் தாவா சொத்தை அபகரிக்க வேண்டுமென்ற நோக்கத்தில் பயிர்களை அளித்து அதன் மூலம் வாதிக்கு தாவா சொத்தின் மீதுள்ள குத்தகை அனுபவத்தை இடையூறு செய்யும் முகமாக கடந்த 14.06.2019 அன்று பிரதிவாதி அத்துமீறி நுழைந்தார் அதற்கு வாதி கூடங்குளம் அணுமின் நிலைய காவல் நிலையத்தில் பிரதிவாதி மீது புகார் அளித்துள்ளார். மேற்படி வாதி கொடுத்த புகாரைப் பெற்றுக்கொண்டு அதற்கு ரசீதும் கொடுக்கப்பட்டுள்ளது. மேற்படி ரசீதை வா.சா.ஆ.4 ஆக வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. புகார் அளித்ததன் அடிப்படையில் பிரதிவாதியின் அத்துமீறல் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது. இந்நிலையில் 2 மாதம் கழித்து மறுபடியும் பிரதிவாதியானவர் 17.08.2019 ஆம் தேதி அன்று தாவா சொத்தில் அத்துமீறி நுழைந்து வாதி பயிரிட்டு இருக்கும் பயிர்களை சேதப்படுத்த முயன்றுள்ளார். அதனால் வாதியானவல் மீண்டும் கூடங்குளம் காவல் நிலையத்தில் புகார் அளிக்க சொன்ற சமயத்தில் காவல் துறை அதிகாரி உரிய சிவில் நீதிமன்றத்தில் சென்று பரிகாரம் தேடிக்கொள்ளுமாறு வாதியிடம் அறிவுறுத்தினார். அதன் அடிப்படையில் வாதியானவர் பிரதிவாதி மீது

J ANNS RAJA Digitally signed by J ANNS RAJA Date: 2023.01.31 15:47:12 +0530

நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார். முதல் நோக்கு ஏற்பு வழக்கும், சமநிலை வழக்கும் வாதியின் வசமே உள்ளது என்று கூறியுள்ளார். மேலும், வழக்கு நிலுவையில் இருந்தபோது மீண்டும் தாவா சொத்தை பொறுத்து குத்தகை மீண்டும் புதுப்பிக்கப்பட்டுள்ளது. அதற்கு சான்றாக வா.சா.ஆ.5 குத்தகை பத்திரத்தை சமர்பித்துள்ளார். மேலும், வாதியானவர் தாவா சொத்தை விளச்சலை பொறுத்து ரொக்க தொகையையும் செலுத்தியுள்ளார். அதற்கு சான்றாக வா.சா.ஆ.6 ரொக்க ரசீதும் சமர்பித்துள்ளார்.

பிரதிவாதியானவர் தன்னுடைய பதில் உரையில் தாவா சொத்தானது திருவாவடுதுறை ஆதனத்திற்கு பாத்தியப்பட்டது என்று ஒப்புக்கொண்டுள்ளார். ஆனால், தாவா சொத்து வாதியின் தகப்பனாரான திரவியம் என்பவர் குத்தகைக்கு எடுத்து விவசாயம் செய்து வந்ததாகவும் கூறியுள்ளார். வாதியின் தகப்பனார் திரவியம் உயிரோடு இருக்கும்போது எந்த பிரச்சனைகளும் தன்னுடைய வாரிசுகளுக்கு வந்துவிடக்கூடாது என்ற எண்ணத்தில் திரவியம் நாடார் தான் குடியிருந்து அனுபவித்து வந்த வீட்டுமனையை இந்த வாதிக்கும், வழக்கு பட்டிகை சொத்தை அவரது மூத்த மகனான தங்கதுரை என்பவருக்கம் பஞ்சாயத்தார் மத்தியில் பேசி ஒதுக்கி கொடுத்துள்ளார் என்று பிரதிவாதியால் கூறப்படுகிறது. வாதியின் சகோதரரான தங்கதுரை என்பவர் தற்போது தொழில்

J ANNS RAJA Digitally signed by J ANNS RAJA Date: 2023.01.31 15:47:27 +0530

நிமித்தமாக மும்பைக்கு சென்று விட்ட காரணத்தினால் தாவா சொத்தில் இந்த பிரதிவாதி விவசாயம் செய்து அதில் வரும் வருமானத்தின் பகுதியை தனக்கு தந்துவிடும் படியும் அதனை பராமரித்து பாதுகாத்துக்கொள்ளும் படியும் கொடுத்துள்ளார். அதன் படி இப்பிரதிவாதி தாவா சொத்தில் பயிரிடும் சம்சார ஸ்தானத்தில் பயிர் செய்து தன் வருமானத்தை பங்கை தங்கதுரை என்பவருக்க கொடுத்து அனுபவத்து வருகிறார். ஆகவே, வாதியின் வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டுள்ளார். ஆகவே, வாதி கூறியது போல் பிரதிவாதியானவர் பயிர்களை அளிக்கவில்லை, குத்தகை அனுபவத்தையும் இடைஞ்சல் செய்யவில்லை. பிரதிவாதியானவர் 25.01.2019 மற்றும் 14.06.2019 அன்று தாவா சொத்தில் அத்துமீறி நுழைந்தார் என்பது வழக்கிற்காக கூறப்பட்ட பொய்யாகும் என்ற கூறியுள்ளார்.

5. பிரதிவாதியானவர் எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளார். ஆனால் வா.சா.1 குறுக்கு விசாரணை செய்ய முன்வரவில்லை. அதனால் பிரதிவாதியானவர் வழக்கில் ஒருதலைபட்சமாக்கப்பட்டுள்ளார். வா.சா.ஆ.2 அனுபவத்தை பார்க்கும்போது தாவா சொத்தானது வாதியால் குத்தகைக்கு எடுக்கப்பட்டது என்பது புலப்படுகிறது. மேலும், வா.சா.ஆ.3 மூலம் வாதியானவர் தாவா சொத்தில் நெல்

J ANNS RAJA Digitally signed by J ANNS RAJA Date: 2023.01.31 15:47:39 +0530

பயிரிட்டு சாகுபடி செய்து விளைச்சலில் நெல்லுக்கு ஈடாக ரொக்க பணத்தை ஆதினத்திற்கு முறைப்படி செலுத்திவருகிறார் என்பதும் புலப்படுகிறது. மேலும், குத்தகை காலம் முடிந்த பின்பும் வா.சா.ஆ.5 ஆவணத்தின் மூலம் மேற்படி தாவா சொத்தைப் பொறுத்து குத்தகையானது 3 வருடங்களுக்கு நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது. ஆதாவது 22.07.2022 முதல் 30.06.2025 வரை நீட்டிப்பும் செய்யப்பட்டுள்ளது. வாதியானவர் நெல் சாகுபடிக்கு ஈடாக ரொக்க பணம் செலுத்தியுள்ளார். அது வா.சா.ஆ.6 ஆக தாக்கல் செய்துள்ளார். மேலும், வா.சா.2 மூலம் வா.சா.ஆ.2 முதல் வா.சா.ஆ.6 முடிய உள்ள ஆவணங்களின் உண்மை தன்மையை நிரூபித்துள்ளார்.

6. வா.சா.ஆ.2 முதல் வா.சா.ஆ.6 வரையிலான ஆவணங்களை பார்க்கும் போது வாதியானவர் தாவா சொத்தில் குத்தகைக்குள்ளார் என்றும், தற்போது குத்தகைதாரராக இருந்து வருகிறார் என்பதும் புலப்படுகிறது. பிரதிவாதி கூறியது போல் தாவா சொத்தை வாதியின் தந்தை திரவியம் அனுபவித்து வந்தார் என்றும், பின்பு வாதியின் சகோதரர் தங்கதுரை அனுபவித்து வந்தார் என்றும், தற்போது பிரதிவாதி தான் சம்சார ஸ்தானத்தில் இருந்து பயிர் செய்து அனுபவித்து வருகிறார் என்பது நிரூபிக்கப்படவில்லை. வாதியானவர் தாவா சொத்தில் சுவாதீனத்திலும்,

J ANNS RAJA
Digitally signed by J ANNS RAJA
Date: 2023.01.31 15:47:49 +0530

அனுபவத்திலும் இருந்து வருகிறார் என்பது வாதியால் நிரூபிக்கப்பட்டுள்ளது. மேலும், பிரதிவாதியானவர் 14.06.2019 அன்று வாதியின் குத்தகை சுவாதீனத்திற்கு இடைஞ்சல் செய்ய முயற்சி செய்துள்ளார் என்பது வா.சா.ஆ.4 ஆவணமான காவல்துறையால் கொடுக்கப்பட்ட ரசீது மூலம் புலப்படுகிறது. ஆகவே, வாதி தன்னுடைய வழக்கை நிரூபித்துள்ளார். ஆகவே, இவ்வெழுவினாக்கள் வாதிக்கு ஆதரவாக தீர்மானிக்கப்படுகிறது.

**எழுவினா 3:**

7. மேலே உள்ள எழுவினாக்கள் தீர்மானிக்கப்பட்ட படி வாதிக்கு வேறு எந்தவித இதர பரிகாரமும் பெற தகுதியில்லை.

இறுதியில், இவ்வழக்கு கீழ்கண்டவாறு வாதிக்கு ஆதரவாக தீர்ப்பளிக்கப்படுகிறது.

1. தபசில் சொத்துக்களில் வாதி குத்தகைகாரர் என்ற முறையில் அனுபவம் செய்வதை தடுக்கும் முகமாக பிரதிவாதி தபசில் சொத்திற்குள் அத்துமீறி நுழையவோ, பயிர்களை அழிக்கவோ அல்லது வேறு எவ்விதத்திலும் எந்த இடைஞ்சலும் செய்யக்கூடாதென நிரந்தர நிலையுறுத்து கட்டளை பரிகாரம் வழங்கி உத்தரவிடப்படுகிறது.

J ANNS RAJA
Digitally signed by J ANNS RAJA
Date: 2023.01.31 15:47:59 +0530

2. செலவுத் தொகை இல்லை.

என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, சுருக்கெழுத்தில் பதியப்பட்டதை அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2023ம் வருடம் ஜனவரி மாதம் 31–ம் நாள் திறந்த வழக்கரங்கில் அவையறியப் பகரப்பட்டது.

J ANNS RAJA Digitally signed by J ANNS RAJA Date: 2023.01.31 15:48:07 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வள்ளியூர்.

**வாதி தரப்பு சாட்சிகள்:**

1. வா.சா.1 – திரு. திரவியம்

2. வா.சா.2 – திரு. வீரநாதன்

**வாதி தரப்பு சான்றாவணங்கள்:**

| | | | |
|---|---|---|---|
| வா.சா.ஆ.1 | 11.07.2022 | சிறப்பு அதிகார ஆவணம் | அசல் |
| வா.சா.ஆ.2 | 22.02.2018 | நஞ்சை குத்தகை பத்திரம் | அசல் |
| வா.சா.ஆ.3 | 21.05.2019 | ரொக்க வரவு ரசீது | அசல் |
| வா.சா.ஆ.4 | 19.06.2019 | கூடங்குளம் காவல்நிலையத்தில் வாதிக்கு வழங்கப்பட்ட சமூக பணி பதிவேடு | அசல் |
| வா.சா.ஆ.5 | 22.07.2022 | நஞ்சை குத்தகை பத்திரம் | அசல் |
| வா.சா.ஆ.6 | 23.09.2022 | திருவாவடுதுறை ஆதினம் அளித்த ரொக்க வரவு ரசீது | அசல் |

J ANNS RAJA Digitally signed by J ANNS RAJA Date: 2023.01.31 15:48:27 +0530

| | | | |
|---|---|---|---|
| வா.சா.ஆ.7 | | வாதியின் ஆதார் அட்டை | நகல்(அசலுடன் ஒப்பிடப்பட்டு சரிபார்க்கப்பட்டது) |

**<u>பிரதிவாதி தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம்:</u>** இல்லை_

J ANNS RAJA Digitally signed by J ANNS RAJA Date: 2023.01.31 15:48:35 +0530

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**வள்ளியூர்.**